வ.மா.பொ.சே.ஆ.குழு சுற்றறிக்கை இல : 02/2024

எனது இல : NP/07/10/01/176
மாகாணப் பொதுச்சேவை ஆணைக்குழு,
வட மாகாணம்.
2024.01.23

பிரதம செயலாளர்,
ஆளுநரின் செயலாளர்,
அமைச்சின் செயலாளர்கள்,
பிரதிப் பிரதம செயலாளர்கள்,
திணைக்களத் தலைவர்கள்,
வடக்கு மாகாணம்.

## வடக்கு மாகாண பொதுச்சேவையின் இணைந்த சாரதிகள் சேவையின் மோட்டார் வாகன சாரதி தரம் III பதவிக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சை - 2024

வடக்கு மாகாண பொதுச்சேவையின் இணைந்த சாரதிகள் சேவையின் மோட்டார் வாகன சாரதி பதவிக்கு காணப்படும் பின்வரும் வகையில் மாவட்ட அடிப்படையிலான 72 பதவி வெற்றிடங்களுக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப்பரீட்சையானது வடக்கு மாகாண பொதுச் சேவை ஆணைக்குழுவின் செயலாளர் அவர்களால் 2024 ஆண்டில் நடாத்தப்படும் என அறிவிக்கப்படுகின்றது. விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதி **2024.02.22** ஆகும்.

| மாவட்டம் | வெற்றிட எண்ணிக்கை |
|---|---|
| யாழ்ப்பாணம் | 43 |
| மன்னார் | 02 |
| வவுனியா | 14 |
| கிளிநொச்சி | 08 |
| முல்லைத்தீவு | 05 |

### 02. ஆட்சேர்ப்பிற்கான சேவை நிபந்தனைகள்:-

02.1 2013.07.01 ஆம் திகதியிலிருந்து செயல் வலுப்பெறும் வகையில் வடக்கு மாகாண கௌரவ ஆளுநர் அவர்களால் அனுமதிக்கப்பட்ட இணைந்த சாரதிகள் சேவையின் மோட்டார் வாகன சாரதி பதவிக்குரிய சேவைப்பிரமாணக் குறிப்பு மற்றும் 2024.01.08ம் திகதியில் வடக்கு மாகாண கௌரவ ஆளுநரால் அனுமதிக்கப்பட்ட சாரதி பதவிக்கான இச் சேவைப்பிரமாணக்குறிப்பின் முதலாவது திருத்தம் மற்றும் இவற்றில் விதந்துரைக்கப்பட்ட நிபந்தனைகளுக்கும், தாபனவிதிக்கோவை ஏற்பாடுகள், நிதிப்பிரமாணங்கள் மற்றும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் **1817/30** ஆம் இலக்க **2013.07.03**ஆம் திகதிய அதிவிசேட வர்த்தமானிப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட வடக்கு மாகாண அரச சேவைக்கான தாபன நடைமுறை ஒழுங்கு விதிக்கோவை ஆகியவற்றிற்கும் உட்பட்டு, தெரிவுசெய்யப்படும் பரீட்சார்த்திகள் குறித்த இணைந்த சாரதிகள் சேவையின் மோட்டார் வாகன சாரதி பதவியின் தரம் III இற்கு மட்டுப்படுத்தப்பட்ட ஆட்சேர்ப்பின் மூலம் நியமிக்கப்படுவர்.

02.2 இப் பரீட்சையில் சித்திபெற்ற பரீட்சார்த்திகள், தமது நியமனத் திகதியிலிருந்து மூன்றாண்டுக் காலம் பதில் கடமை தகுதிகாண் அடிப்படையில் நியமிக்கப்படுவர். இப்பதவி நிரந்தரமானதும் ஓய்வூதிய உரித்துடையதுமாகும். சேவைப் பிரமாணக்குறிப்பில் குறிப்பிடப்பட்டவாறு இணைந்த சாரதிகள் சேவையின் மோட்டார் வாகன சாரதி பதவியில் தரம் III இற்கு ஆட்சேர்ப்புச் செய்யப்பட்ட திகதியிலிருந்து 03வருட காலத்திற்குள் முதலாவது வினைத்திறமை காண் தடைப்பரீடசையில் சித்தியெய்தல் வேண்டும்.

02.3 இச்சேவை இடமாற்றத்திற்குட்பட்ட சேவையாகும். இதனால் இந் நியமனம் பெறுபவர்கள் வடக்கு மாகாணத்தின் எப்பாகத்திலும் சேவையாற்ற வேண்டுமென்ற நிபந்தனைக்குட்பட்டவர்கள் ஆவர்.

02.4 ஒரு சேவை நிலையத்தில் நியமனம் பெறுபவர், அதே சேவை நிலையத்தில் குறைந்தது ஐந்து (05) வருடங்கள் தொடர்ச்சியாக சேவையாற்றுதல் வேண்டும் என்பது கட்டாய நிபந்தனையாகும். எனினும், சேவையின் தேவையின் அடிப்படையில் நியமன அதிகாரியினால் மாற்றத்திற்கு உட்படலாம்.

02.5 அரசாங்க நிர்வாக சுற்றறிக்கை 18/2020 மற்றும் இது தொடர்பாக தொடர்ந்து வரும் சுற்றறிக்கைகள் என்பவற்றுக்கமைய நியமனத் திகதியிலிருந்து 03 வருடங்கள் முடிவதற்கு முன்னர் குறித்துரைக்கப்பட்ட இரண்டாவது அரச கரும மொழியில் தேர்ச்சியைப் பெற்றுக்கொள்ளல் வேண்டும்.

02.6 நியமனங்களின் எண்ணிக்கை மற்றும் அமுலுக்கு வரும் திகதி என்பன நியமன அதிகாரியினால் வரையறுக்கப்படும். அறிவிக்கப்பட்ட வெற்றிடங்கள் தொடர்பில் சில வெற்றிடங்கள் அல்லது சகல வெற்றிடங்களையும் நிரப்பாது விடுவதற்கான அதிகாரத்தினை நியமன அதிகாரி கொண்டுள்ளார். நியமிக்கப்படவுள்ள ஆட்களின் எண்ணிக்கை 72 ஆகும்.

## 03. சம்பள அளவுத் திட்டம்:-

அரசாங்க நிர்வாகச் சுற்றறிக்கை 03/2016க்கு அமைவான, சம்பளத் தொகுதி **PL 3 - 2016** க்கு ஏற்ப இணைந்த சாரதிகள் சேவையின் மோட்டார் வாகன சாரதி பதவியின் தரம் - III ற்கான திரட்டிய சம்பள விகிதமானது ரூபா **25,790 – 10 x 270 - 10 x 300 - 10 x 330 – 12 x 350 – 38,990/-** ஆகும். ரூபா 26,600/- சம்பள படிநிலைக்கு முன் / அமர்த்தப்படும் படிநிலையிலிருந்தான மூன்றாவது படிநிலையை அடைவதற்கு முன்னர் வினைத்திறமைகாண் தடைப் பரீட்சையில் சித்திபெறல் வேண்டும்.

## 04. பொதுவான தகைமைகள்:-

04.1 விண்ணப்பதாரி இலங்கைப் பிரஜையாக இருத்தல் வேண்டும்.

04.2 விண்ணப்பதாரி வடக்கு மாகாணத்தின் எப்பாகத்திலும் கடமையாற்றக் கூடிய சிறந்த தேகாரோக்கியமும் உள்ளவராக இருத்தல் வேண்டும் என்பதுடன் சிறந்த நன்னடத்தையும் உள்ளவராக இருத்தல் வேண்டும்.

04.3 விண்ணப்பதாரி விண்ணப்பத்தை ஏற்கும் **இறுதித் திகதியன்று அல்லது அதற்கு முன்னர் இவ்விளம்பரத்தின் மூலம் தேவைப்படுத்தப்பட்ட அனைத்துத் தகைமைகளையும்** கொண்டிருத்தல் வேண்டும்.

*04.4* மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சை மூலமான ஆட்சேர்ப்பின்போது உச்ச வயதெல்லை ஏற்புடையதன்று.

## 05. கல்வித் தகைமை மற்றும் சேவை அனுபவம்:-

### (அ) *கல்வித் தகைமை :-*

க.பொ.த (சா/த) பரீட்சையில் இரண்டிற்கு மேற்படாத அமர்வுகளில் மொழி (தமிழ் / சிங்களம்) மற்றும் ஏதேனும் ஒரு பாடம் அடங்கலாக இரண்டு (02) பாடங்களில் திறமைச் சித்திகளுடன் ஆறு (06) பாடங்கள் சித்தியடைந்திருத்தல் வேண்டும். இதில் ஒரே அமர்வில் ஆகக்குறைந்தது ஐந்து (05) பாடங்களிலாவது சித்திபெற்றிருத்தல் வேண்டும்.

### (ஆ) தொழிற் தகைமை:-

1. மோட்டார் போக்குவரத்து ஆணையாளர் நாயகத்தினால் வழங்கப்படுகின்ற 24 அந்தருக்கு **(CWT)** குறையாத ஸ்ரேசன் வெகன் வண்டிகளை மற்றும் தனிப்பட்ட / வாடகைக் காரினைச் செலுத்துவதற்கான செல்லுபடியான வாகன சாரதி அனுமதிப் பத்திரத்தினை பெற்றிருத்தல் வேண்டும்.
2. ஆட்சேர்ப்புக்கான விண்ணப்பத்தின் முடிவுத் திகதிக்கு குறைந்தபட்சம் 03 வருடங்களுக்கு முன்னர்

   i. வாகன வகுப்பு **'C'** மற்றும் **'C1'** ஐக் கொண்டிருத்தல்.

   **அல்லது**

   ii. புதிய நடைமுறையின் கீழ் வாகன வகுப்பு **'B'** ஆகியவற்றினைச் செலுத்துவதற்குரிய வாகன சாரதி அனுமதிப் பத்திரத்தினை பெற்றிருத்தல் வேண்டும்.
3. பெருந்தெருக்கள் சட்டவிதிகள் தொடர்பில் சிறந்த அறிவினைப் பெற்றிருத்தல் வேண்டும்.

### (இ) *சேவை அனுபவம் :-*

1. அரசாங்க நிர்வாகச் சுற்றறிக்கை 03/2016க்கு அமைவாக, ஆரம்பமட்ட சம்பளத் தொகுதி **PL 1 – 2016** அல்லது **PL 2 – 2016** கீழ் சம்பளத்தினைப் பெற்றுக் கொள்ளும் மாகாண பொதுச் சேவையின் ஓர் நிரந்தர அலுவலராக இருத்தல் வேண்டும்.
2. வடக்கு மாகாண பொதுச்சேவையில் நிரந்தர பதவியை வகிப்பதுடன் அப்பதவியில் உறுதிப்படுத்தப்பட்டிருத்தல் வேண்டும். விண்ணப்ப முடிவுத் திகதிக்கு உடன் முன்வரும் ஐந்து (05) வருடகாலப் பகுதியில் தொடர்ச்சியாகவும் திருப்திகரமானதுமான சேவையினை கொண்டிருத்தல் வேண்டும்.

குறிப்பு :

1. அரசாங்க சேவை ஆணைக்குழுவின் 01/2020 இலக்க சுற்றறிக்கை, மற்றும் அதன் தொடர்ச்சியான சுற்றறிக்கைகள் ஆகியனவற்றின் ஏற்பாடுகளுக்கமைய, 'ஒழுக்காற்றுத் தண்டனையொன்றை பெற்றிருத்தல் ஆகாது' என்றவாறும் வடக்கு மாகாண பொதுச் சேவையின் நிரந்தரப் பதவியில் சேவையாற்றுபவராக இருக்க வேண்டுமென்பதுடன், அதனைத் திணைக்களத் தலைவர் உறுதிப்படுத்துதல் வேண்டும்.

2. ஏதேனும் பதவியொன்றுக்கு நிரந்தரமாக நியமனம் செய்வதற்கு முன் சேவையாற்றியுள்ள அல்லது ஏதேனும் பதவியொன்றுக்கு நிரந்தரமாக நியமனம் செய்வதற்கு நிபந்தனையாக சேவையாற்றியுள்ள அல்லது பயிற்சி பெறுவதற்கான கால எல்லையானது, மேற்படி **05. (ஆ) 2** இல் குறிப்பிட்ட தகமைகளைப் பெறுவதற்கான ஐந்தாண்டுக் காலவெல்லையாக கணக்கிலெடுக்கப்பட மாட்டாது. ஏதேனும் பதவியொன்றில் நிரந்தரமாக நியமனம் செய்வதற்கு முன்னர் தற்காலிக / அமைய அடிப்படையில் சேவையாற்றியுள்ள காலப்பகுதிகளையும் மேற்படி **05. (ஆ) 2** இல் குறிப்பிட்டுள்ள தகைமைகளைப் பெறுவதற்கான ஐந்து (05) ஆண்டு காலவெல்லையாக கணக்கிலெடுக்கப்படல் ஆகாது.

**கவனிக்க :**
ஒவ்வொரு விண்ணப்பதாரியும் பதவிக்குரிய சகல தகைமைகளையும் 2024.02.22 ம் திகதி அல்லது அதற்கு முன்னர் பூர்த்தி செய்திருத்தல் கட்டாயமாகும்.

(ஈ) ***உடற் தகைமை :-***

1. குறைந்தபட்சம் 5**’** (அடி) 2.5**”** (அங்குலம்) (158.75cm) உயரமுடையவராக இருத்தல் வேண்டும்.

2. இரவு மற்றும் பகல் நேரங்களில் தனது கடமையினை மேற்கொள்ளும் பொருட்டான சிறந்த கண்பார்வையினைப் கொண்டிருப்பதுடன் ஆரோக்கியமான உடல், உள நலத்தினையும் கொண்டிருத்தல் வேண்டும். நேர்முகப் பரீட்சையின்போது அரச மருத்துவ அதிகாரியினால் வழங்கப்பட்ட சான்றிதழ் மூலமாக இதனை நிரூபித்தல் வேண்டும்.

## *06.* ஆட்சேர்ப்பு முறை:-

06.1 ஒரு விண்ணப்பதாரி, ஒரு மாவட்ட வெற்றிடத்திற்கு மட்டுமே விண்ணப்பிக்க அனுமதிக்கப்படுவர். விண்ணப்பதாரி வடமாகாணத்தில் எம்மாவட்டத்தையும் நிரந்தர வதிவிட மாவட்டமாக கொண்டிருப்பினும் தான் விரும்பிய மாவட்டத்தை நியமனத்தை எதிர்பார்த்து விண்ணப்பிக்க முடியும். நியமனத்தை எதிர்பார்த்து விண்ணப்பித்த மாவட்டம் பின்னர் மாற்றம் செய்ய அனுமதிக்கப்படமாட்டாது.

06.2 பொது நேர்முகத்தேர்விற்கு எழுத்துப்பரீட்சையில் பெற்றுக்கொள்ளும் புள்ளிகளின் அடிப்படையில் பரீட்சார்த்திகள் தெரிவுசெய்யப்படுவர்.

06.3 நேர்முகத்தேர்வில் இவ் ஆட்சேர்ப்பு விளம்பரத்தின் மூலம் தேவைப்படுத்தப்பட்ட தகைமையை பரீட்சார்த்திகள் கொண்டுள்ளார்களா என்பது பரீட்சிக்கப்படும். பொது நேர்முகத்தேர்விற்கு புள்ளிகள் வழங்கப்படமாட்டாது.

06.4 பொது நேர்முகத்தேர்வின் மூலம் தகைமைகள் உறுதிப்படுத்தப்பட்ட பரீட்சார்த்திகள் தொழிற் தேர்விற்கு (Trade test) அழைக்கப்படுவர்.

06.5 தொழிற் தேர்வில் (Trade test) சித்தியடைந்தவர்கள் அவர்கள் விண்ணப்பித்த மாவட்டத்தில் காணப்படும் வெற்றிட எண்ணிக்கைக்கு அமைய அம்மாவட்டத்திற்கு விண்ணப்பித்தவர்கள் எழுத்துப் பரீட்சையில் பெற்றுக்கொண்ட புள்ளிகளின் **மாகாண உயர்புள்ளி ஒழுங்கில்** (Provincial Merit Order) தெரிவுசெய்யப்படுவர்

## *07.* பரீட்சைக்கட்டணம்:-

விண்ணப்பதாரி, பரீட்சைக் கட்டணம் ரூபா 500.00 தொகையை “செயலாளர், மாகாண பொதுச்சேவை ஆணைக்குழு, வடக்கு மாகாணம்” என்ற பெயருக்குக் கிடைக்கக்கூடியவாறாக வடக்கு மாகாணத்தில் அமைந்துள்ள பிரதேச செயலகமொன்றில் செலுத்தி, அதற்கான பற்றுச்சீட்டினை விண்ணப்பப் படிவத்தில் உரிய கூட்டினுள் கழராதவாறு ஒட்டி அனுப்புதல் வேண்டும். எக்காரணம் கொண்டும் இக்கட்டணம் மீளச் செலுத்தப்படமாட்டாது. இக் கட்டணத்தை வேறு ஏதும் பரீட்சைக்கு மாற்றவும் அனுமதி வழங்கப்படமாட்டாது.

## 08. விண்ணப்பிக்கும் முறை:-

08.1 இவ்வறிவித்தலுடன் வெளியிடப்படும் விண்ணப்பப்படிவத்தினை பூர்த்தி செய்து, பூர்த்தி செய்த விண்ணப்பப் படிவத்தை **2024.02.22** ம் திகதி அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக் கூடியவாறு, **“செயலாளர், மாகாண பொதுச்சேவை ஆணைக்குழு, வடக்கு மாகாணம், இல: 393/48, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்”** எனும் முகவரிக்கு பதிவுத் தபாலிலோ அல்லது கைமூலத் தபாலிலோ அனுப்பிவைத்தல் வேண்டும்.

08.2 அனுப்பிவைக்கப்படும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் **“வடக்கு மாகாண பொதுச்சேவையின் இணைந்த சாரதிகள் சேவையின் மோட்டார் வாகன சாரதி பதவியின் தரம் III இற்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப்பரீட்சை – 2024”** எனக் குறிப்பிடப்படல் **வேண்டும்.**

08.3 விண்ணப்பப்படிவத்தின் நிழற்படப்பிரதியை தம்வசம் வைத்துக் கொள்ளல் பயனுள்ளதாகும். விண்ணப்பத்தின் புகைப்படப்பிரதி மற்றும் முன்னோடிப்பிரதி என்பன ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது. பரீட்சைக்கான அனுமதி அட்டை மாகாண பொதுச்சேவை ஆணைக்குழுச் செயலாளர் அவர்களினால் அனுப்பிவைக்கப்படும். பரீட்சைக்கான அனுமதி அட்டை அனுப்பிவைக்கப்படலானது விண்ணப்பதாரி சகல தகைமைகளையும் கொண்டுள்ளார் எனக்கருதப்படலாகாது.

08.4 விண்ணப்பங்களைச் சமர்ப்பித்துள்ள விண்ணப்பதாரிகள் பரீட்சைத் திகதிக்கு குறைந்த பட்சம் 03 நாட்களுக்கு முன்னராவது அனுமதி அட்டை கிடைக்காவிடின், அனுமதி அட்டை கிடைக்காமைபற்றி பின்வரும் விபரங்களுடன் **“செயலாளர், மாகாண பொதுச்சேவை ஆணைக்குழு, வடக்கு மாகாணம், இல: 393/48, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்”** எனும் முகவரிக்கு அறிவிக்க வேண்டும். (தொலைபேசி இல – 021 221 9939, தொலைநகல் இல - 021 221 9940)

குறிப்பு :-

கோரிக்கைக் கடிதம், பரீட்சையின் பெயர், விண்ணப்பதாரியின் முழுப்பெயர், தேசிய அடையாள அட்டை இலக்கம், விண்ணப்பதாரியின் அஞ்சல் முகவரி, விண்ணப்பப் படிவத்தின் பிரதி, விண்ணப்பம் தபாலில் சேர்க்கப்பட்ட அஞ்சல் அலுவலகம், பதிவு இலக்கம், மற்றும் திகதி, பரீட்சைக்கட்டணம் செலுத்தியதற்கான சான்றுப்படுத்திய நிழற்படப்பிரதி, அனுமதி அட்டை அனுப்பி வைப்பதற்கான தொலைநகல் இலக்கம்.

## 09. ஆளடையாளத்தை நிரூபித்தல்:-

பரீட்சார்த்திகள் தாம் தோற்றும் ஒவ்வொரு பாடத்திற்கும் மேற்பார்வையாளர் திருப்தியுறும் வகையில் தங்களது ஆளடையாளத்தை நிரூபிக்குமாறு வேண்டப்படுகின்றனர். ஆளடையாளத்தை நிரூபிப்பதற்கு பின்வரும் ஆவணங்களில் ஏதேனும் ஒன்று ஏற்றுக்கொள்ளப்படும்.

(i) ஆட்பதிவுத் திணைக்களத்தினால் வழங்கப்பட்ட தேசிய ஆள்அடையாள அட்டை
(ii) செல்லுபடியாகும் கடவுச்சீட்டு.
(iii) செல்லுபடியாகும் சாரதி அனுமதிப்பத்திரம்

மேற்குறிப்பிடப்பட்ட ஆவணமொன்றை சமர்ப்பிக்கத்தவறும் பரீட்சார்த்தியொருவரின் பரீட்சார்த்தி உரிமை **செயலாளர், மாகாண பொதுச்சேவை ஆணைக்குழு, வடக்கு மாகாணம்** அவர்களினால் இரத்துச் செய்யப்படலாம். பரீட்சை நடாத்துதல் தொடர்பாக வடக்கு மாகாண பொதுச்சேவை ஆணைக்குழு செயலாளரினால் விதிக்கப்படும் சட்டதிட்டங்களுக்கு பரீட்சார்த்திகள் அமைந்தொழுக வேண்டும். அச்சட்டதிட்டங்களை மீறினால் மாகாண பொதுச்சேவை ஆணைக்குழு செயலாளரினால் விதிக்கப்படும் தண்டனைக்கு ஆளாதல் வேண்டும்.

## 10. பொய்யான தகவல்களுக்கான தண்டனை:-

விண்ணப்பப்பத்திரங்களைப் பூர்த்தி செய்யும்போது மிகக்கவனத்துடன் சரியான தகவல்களை அளித்தல் வேண்டும். இப்பரீட்சை விதிகளின் படி எவரேனும் விண்ணப்பதாரியொருவர் பரீட்சைக்கு முன்னரோ பரீட்சையின்போதோ அல்லது பரீட்சையின் பின்னரோ எச்சந்தர்ப்பத்திலாவது தகைமையற்றவர் எனத் தெரியவருமாயின், அவரது பரீட்சார்த்தியுரிமை அச்சந்தர்ப்பத்தில் இரத்துச் செய்யப்படும். விண்ணப்பதாரி சமர்ப்பிக்கின்ற ஏதேனுமொரு தகவல் பொய்யானதெனத் தெரியவரும் எச்சந்தர்ப்பத்திலும் அவர் மாகாண அரச சேவையிலிருந்து நீக்கப்படலாம்.

## 11. பரீட்சைத் திட்டம்:-

இப்பரீட்சைகள் எழுத்துப் பரீட்சை, பொது நேர்முகப்பரீட்சை மற்றும் தொழிற்பரீட்சை எனும் பகுதிகளைக் கொண்டிருக்கும் எழுத்துப் பரீட்சையானது கீழ்க் குறிப்பிட்டவாறான வினாத்தாள்களைக் கொண்டிருக்கும் என்பதுடன். இப்பரீட்சை கிடைக்கப்பெறும் விண்ணப்பங்களுக்கு ஏற்ப தமிழ் மற்றும் சிங்களம் ஆகிய இரு மொழிகளில் நடாத்தப்படும். விண்ணப்பித்த மொழியை பின்னர் மாற்றுவதற்கு இடமளிக்கப்படமாட்டாது.

### 11.1 எழுத்துப் பரீட்சை :-

நியமனத்திற்கு தகைமை பெறுவதற்கு எழுத்துப் பரீட்சையின் ஒவ்வொரு வினாப்பத்திரத்திலும் சித்தி பெறும்பொருட்டு குறைந்த பட்சம் **40%** புள்ளிகளைப் பரீட்சார்த்தி பெற்றுக்கொள்வதுடன், மொத்தப் புள்ளிகளில் குறைந்தபட்சம் **50%** புள்ளிகளையும் பெறுதல் வேண்டும்.

| இல | வினாத்தாள் | வினாத்தாள் உள்ளடக்கம் | காலம் | மொத்தப் புள்ளிகள் | சித்தியடைய தேவையான புள்ளிகள் |
|---|---|---|---|---|---|
| 01. | உளச்சார்புப் பரீட்சை | எண்கள் தொடர்பான திறன் மற்றும் தர்க்க ரீதியாக முடிவெடுக்கும் திறன் ஆகியன தொடர்பான அறிவைப் பரிசோதிக்கும் வகையிலான 50 வினாக்களை உள்ளடக்கி இருக்கும். | 01 மணித்தியாலம் | 100 | 40 |
| 02. | மொழித்திறன் | சுருக்கம் எழுதுதல், விளங்கிக்கொள்ளும் ஆற்றல் உச்சரிப்பு, ஒத்தசொல், எதிர்ச்சொல், கடிதம் வரைதல் மற்றும் இலக்கண உபயோகம் ஆகியன தொடர்பான அறிவைப் பரிசோதிக்கும் வினாக்களைக் கொண்டிருக்கும். | $1^1/_2$ மணித்தியாலங்கள் | 100 | 40 |

### 11.2 பொதுநேர்முகத் தேர்வுப் பரீட்சை

எழுத்துப் பரீட்சையில் சித்தியடையும் பரீட்சார்த்திகள் பொதுநேர்முகத் தேர்வுக்கு உட்படுத்தப்படுவர். பொதுநேர்முகத் தேர்வின்போது ஆட்சேரப்புக்கான அடிப்படைத் தகைமைகள் பரிசீலிக்கப்படும் என்பதுடன், இதன் பொருட்டு புள்ளிகள் வழங்கப்பட மாட்டாது.

### 11.3 தொழிற் பரீட்சை

பொது நேர்முகத் தேர்வுப் பரீட்சையில் தகைமை பெறும் பரீட்சார்த்திகள், பின்வருமாறான தொழிற்பரீட்சைக்கு உட்படுத்தப்படுவர் என்பதுடன், தொழிற் பரீட்சையில் குறிப்பிடப்பட்ட ஒவ்வொரு விடயப்பரப்பிலும் அவ்விடயத்திற்கு தேவைப்படுத்தப்பட்ட சித்திப்புள்ளிகளை பெற்றுக்கொள்ளல் வேண்டும்.

| இல | புள்ளிகள் வழங்கப்படும் பிரதான விடயங்கள் | உச்ச புள்ளிகள் | சித்திப் புள்ளிகள் |
|---|---|---|---|
| 01. | வாகனம் செலுத்துவதிலுள்ள தேர்ச்சி | 40 | 20 |
| 02. | பெருந்தெருக்கள் விதிகள் தொடர்பான பிரயோக அறிவு | 40 | 20 |
| 03. | மோட்டார் பொறிமுறை விஞ்ஞானம் தொடர்பான அடிப்படை அறிவு | 20 | 10 |
| | **மொத்தம்** | **100** | **50** |

குறிப்பு :-

பரீட்சார்த்திகள் தொழிற்பரீட்சையில் சித்தியடைந்திருந்தாலும் நியமனத்திற்காக தெரிவு செய்யும் போது எழுத்துப் போட்டிப் பரீட்சையின் உயர்புள்ளியின் வரிசையொழுங்கில் தெரிவு செய்யப்படுவர்.

12. பரீட்சைப் பெறுபேறுகள்:-

பரீட்சார்த்திகளுக்கான பரீட்சைப் பெறுபேறுகள் வடக்கு மாகாண பொதுச் சேவை ஆணைக்குழு செயலாளர் அவர்களால் www.np.gov.lk என்ற வடக்கு மாகாண இணையத்தளம் மூலம் வெளியிடப்படும்.

13. பரீட்சை நடாத்துவதற்கு உத்தேசிக்கப்பட்ட பரீட்சை நகரங்களும் அவற்றின் எண்களும் பின்வருமாறு,

| *நகரம்* | *நகர எண்* |
|---|---|
| யாழ்ப்பாணம் | 01 |
| மன்னார் | 02 |
| வவுனியா | 03 |
| கிளிநொச்சி | 04 |
| முல்லைத்தீவு | 05 |

ஒரு பரீட்சை நகரம் சார்பாகக் கிடைக்கப்பெறும் விண்ணப்பங்களின் எண்ணிக்கை குறையுமிடத்து இப்பரீட்சை அண்மையிலுள்ள பரீட்சை நகரத்திற்கு மாற்றப்படலாம்.

14. இப் பரீட்சையை நடாத்துதல் அல்லது இரத்து செய்தல் தொடர்பான அதிகாரம் வடக்கு மாகாண பொதுச் சேவை ஆணைக்குழுச் செயலாளருக்கு உண்டு. இவ் விளம்பரத்தில் தமிழ் மற்றும் சிங்களம் ஆகிய மொழி உரைகளுக்கிடையில் ஏதேனும் வேறுபாடு காணப்படும் பட்சத்தில் தமிழ் மொழி உரையே மேலோங்குதல் வேண்டும்.

**சி.திருவாகரன்**
செயலாளர்,
மாகாண பொதுச் சேவை ஆணைக்குழு,
வடக்கு மாகாணம்.
2024.01.23.

சி.திருவாகரன்
செயலாளர்
மாகாண பொதுச்சேவை ஆணைக்குழு
வடமாகாணம்